

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 14ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக்கோப்பைப் போட்டியையொட்டி சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டு பணிகள் குறித்து நேற்று (24.11.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

### சென்னை – மதுரையில் ஆடவர் ஹாக்கி ஜூனியர் உலகக் கோப்பை போட்டி

# வீரர்களை பொதுமக்கள் - ஹாக்கி ரசிகர்கள் உற்சாகப்படுத்த வேண்டும்!

### இராதா கிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் முன்னேற்பாடு பணிகளை பார்வையிட்டபின்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

சென்னை, நவ. 25-

ஆடவர் ஹாக்கி ஜீனியர் உலக கோப்பை போட்டிகளை சென்னை மற்றும் மதுரையில் மைதானத்தில் நேரில் பார்வையிட்டு வீரர்களை உற்சாகப் படுத்த வேண்டும் - பொதுமக்கள், விளையாட்டு வீரர்கள், ஹாக்கி ரசிகர்களுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அழைப்பு

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஹாக்கி இந்தியா இணைந்து நடத்தும் 14-ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக்கோப்பைப் போட்டி, தமிழ்நாட்டில், சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம் மற்றும் மதுரையில் அமைந்துள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் ஹாக்கி விளையாட்டரங்கம் ஆகிய இரு இடங்களிலும் 28.11.2025 முதல் 10.12.2025 வரை சிறப்பாக நடைபெற உள்ளது.

இதனையொட்டி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.11.2025) சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டு பணிகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மைதானத்தில் பார்வையாளர்கள் அமர்வதற்கும், போட்டியில் விளையாட உள்ள பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கான வசதிகள், மின்விளக்கு வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்து அலுவலர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் உள்ள டாக்டர் கலைஞர் பார்வையாளர் மாடத்தில் இருந்து வெளிநாட்டு அணியினர் பயிற்சி ஆட்டம் மேற்கொள்வதை பார்வையிட்டு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து அலுவலர்கள் மற்றும் ஹாக்கி இந்தியா நிர்வாகிகளுடன் கலந்தாலோசனை மேற்கொண்டார்.

பின்னர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி.

இராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அதை மேற்பார்வையிடுவதற்காகதான் வந்திருக்கின்றேன். அனைத்து விதமான பாதுகாப்பு வசதி, உணவு வசதி, போக்குவரத்து வசதி, தங்கும் வசதி இது போன்று அனைத்து வசதிகளும் செய்யப்பட்டிருக்கிறது.

வருகின்ற 28 ஆம் தேதி சென்னை மற்றும் மதுரையில் போட்டிகள் தொடங்க இருக்கின்றது. மதுரையில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்கனவே அங்கே பத்திரிக்கையாளர் சந்திப்பு நடத்தி டிக்கெட் குறித்து விளக்கி இருக்கிறார். டிக்கெட்டுகளுக்கு நல்ல டிமாண்ட் இருக்கிறது. பொதுமக்களிடமும், விளையாட்டு வீரர்கள், ஹாக்கி ரசிகர்களிடமும் கேட்பதெல்லாம், இந்த உலக கோப்பை ஜீனியர் ஹாக்கி பற்றி நீங்கள் நிறைய பேரிடம் சொல்லுங்கள். போட்டிகளை நேரடியாக வந்து பாருங்கள். இந்த போட்டியை உற்சாகப்படுத்துங்கள்.

ஹாக்கி விளையாட்டிற்கு எப்போதுமே, தென்தமிழகத்திலும் சரி, சென்னையிலும் சரி தமிழ்நாட்டிலிருந்து நிறைய ஒலிம்பிக் வீரர்கள் வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த போட்டி புது உற்சாகத்தையும், உத்வேகத்தையும் கொடுக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு ஹாக்கி ஆசிய கோப்பை போட்டிகள் நடக்கும் போது ஒவ்வொரு போட்டிக்கும் இங்கு இருக்கக்கூடிய தமிழ்நாடு விளையாட்டு மேம்பாடு ஆணையத்தின் (SDAT) விடுதி மாணவர்கள் அத்தனைபேரையும் இங்கு அழைத்து வந்து, அவர்களுக்கெல்லாம் இந்த போட்டியை நேரில் பார்ப்பதற்கான, இன்னும் சொல்ல வேண்டும் என்றால், அந்த வீரர்களுடன் பேசுவதற்கான வாய்ப்புகள் எல்லாம் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது.

இந்த முறையும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாடு ஆணையத்தின் (SDAT) விடுதி விளையாட்டு வீரர்கள் அனைவருக்கும் அனைத்து போட்டிகளையும் இலவசமாக கட்டணமில்லாமல் பார்க்கும் வசதியோடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

SDAT ஹாக்கி விளையாட்டு வீரர்கள் அனைவரும் வந்து பார்க்கலாம். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாடு ஆணையத்தின் விடுதியில் இருக்கின்ற மற்ற விளையாட்டு வீரர்களும் வந்து இந்த போட்டிகளை பார்ப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கிறது.

**மிகப்பெரிய போட்டிகள் நடத்தப்படும்!**

மிகப்பெரிய போட்டிகள் நடத்தப்படும் போது எல்லா மாநிலங்களுக்கும் கோப்பை அனுப்படும். பல்வேறு மாநிலங்களுக்கும் உலகக் கோப்பை பயணம் மேற்கொள்ளப்பட்டது. கடந்த 10 நாட்களுக்கு முன்னர் டெல்லியில் நடைபெற்ற ஹாக்கி இந்தியா நூற்றாண்டு விழாவின்போதும் மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் கோப்பையை அறிமுகம் செய்தார்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஹாக்கி உலகக்கோப்பை பயணம் மேற்கொள்ளப்படுகின்றது என்று தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, இந்திய ஹாக்கி சங்க பொருளாளர் சேகர் ஜெ. மனோகரன் உள்பட அரசு அலுவலர்கள், ஹாக்கி விளையாட்டு வீரர்கள் ரசிகர்கள் கலந்து கொண்டனர்.

---

### நவம்பர் 27 இளைஞர் எழுச்சி நாள் விழாவை முன்னிட்டு

# கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நலத்திட்ட உதவிகள் - உணவு வழங்கல்!

### மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர், நவ. 25

கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் சி.வெ.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



வருகின்ற (27.11.2025 வியாழக்கிழமை) அன்று இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழகங்கள் தோறும் நலத்திட்ட உதவிகள், அன்னதானம், பள்ளி மாணவர்களுக்கு நோட், பேனா, பென்சில் மற்றும் பொது மக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும்.

அதுசமயம் கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் , தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டுக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் சி. வெ.கணேசன் தெரிவித்துள்ளார்.

---

### புழல் எம். நாராயணன் தலைமையில் – மாதவரம் வடக்கு பகுதியில்

# 16 வது வட்டத்தில் வாக்காளர் சேர்த்தல் நீக்கல் பணிகள் தீவிரம்!

### இ.கண்ணப்பன் முன்னிலையில் ஜெ. அருண் பணிகளை துரிதப்படுத்தினார்!

மாதவரம் , நவ. 25

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட 16வது வட்டத்தில் அடங்கிய அனைத்து பாகங்களிலும் எஸ் ஐ ஆர் எனப்படும் வாக்காளர் சேர்த்தல் நீக்கல் சிறப்பு சீராய்வு முகாமில் கழகத்தினர் தீவிரமாக ஈடுபட்டு பொதுமக்களுக்கு உதவிகள் செய்து வருகின்றனர்.

மாதவரம் வடக்கு பகுதி 16வது வட்டத்திற்குட்பட்ட 1 முதல் 12 வரை உள்ள பாகங்களில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தீவிர வாக்காளர் சேர்த்தல் சீராய்வு முகாம் பணியில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் கழகத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

16வது வட்டச் செயலாளர் இ கண்ணப்பன் அவர்களின் முன்னிலையில் மாவட்ட துணை செயலாளர் அறிவழகி பாலகிருஷ்ணன், பகுதி நிர்வாகிகள் ஆ. ராஜேந்திரன், கே. சிவசங்கரன், நா. மோகன் குமார் நாகூரார், பா. சந்திரன், பி.தரணி, கருணாகரன், வட்ட நிர்வாகிகள் அருள், பரசுராமன், வக்கீல் வெங்கடேசன், புவனேஸ்வரி மகேஷ்குமார், குமரவேல், ரமேஷ், முத்தையா, ராஜ் மோகன், மாரி, உத்திராஜ், பாக ஒருங்கிணைப்பாளர்கள் எலந்தனூர்வி. சிவப்பிரகாஷ், ரோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், செமின் எடிசன், வக்கீல் சுரேந்தர், பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் சாந்தி, பார்கவி, அபிதா முகமது அலி, பாக முகவர்கள் ராஜி, தரணிகுமார், நித்தியானந்தம், கிருபாகரன், தமிழ்ச்செல்வன், உள்ளிட்டோர் கலந்துகொண்டு பணிகளை துரிதப்படுத்தி பொது மக்களுக்கு உதவி செய்து வருகிறார்கள்.

ஆண்டார்குப்பம் சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, மணலி புதுநகர் விவேகானந்தா வித்யாலயா மேல்நிலைப்பள்ளி, சடையங்குப்பம் சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் இந்த முகாம்களில் வருகின்ற பொது மக்களுக்கு எஸ் ஐ ஆர் படிவங்களை பூர்த்தி செய்து வாக்குச்சாவடி அலுவலர்களுடன் கழகத்தினர் தீவிரமாக செயல்பட்டு வருகின்றனர்.

இந்த பணிகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம் நாராயணன் தலைமையில் மாதவரம் சட்டமன்றத் தொகுதி தலைமை கழக பார்வையாளர் டாக்டர் ஜெ. அருண் அவர்கள் நேரில் சென்று பாகம் வாரியாக ஆய்வு செய்தார். பாக முகவர்களிடம் இடமாற்றம், இறந்தவர்கள் மற்றும் முகவரி மாற்றம் உள்ளிட்டவற்றில் உள்ள அனைத்து விவரங்களையும் புள்ளி விவரத்துடன் சேகரித்து பொதுமக்களுக்கு உதவி செய்ய அறிவுறுத்தினார்.

---

### மாநிலம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி

# நவ.27 “இளைஞர் எழுச்சி நாளை” கொண்டாடிடுக!

### தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் வேண்டுகோள்!

இளைஞர்களின் எழுச்சி ஞாயிறு இளந்தலைவர் கழகத்தின் விடிவெள்ளி தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளான நவம்பர் 27 அன்று, தி.மு.க. தொழிலாளர் அணியின் சார்பில் மாநிலம் முழுவதும் மாநில நிர்வாகிகள் மற்றும் ஒவ்வொரு மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் “இளைஞர் எழுச்சி நாளாக” மாநிலத்தில் அனைத்துப் பகுதிகளிலும் எழுச்சியுடன் கொண்டாடிட வேண்டுமெனவும்;

இப்பிறந்த நாள் விழாவினை, தொழிலாளர் அணிச் சார்பில் நலிந்த தொழிலாளர்களுக்கும் ஏழையெளியோர்க்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் வண்ணம் தத்தமது பகுதிகளில் உள்ள முதியோர் இல்லங்கள், அனாதை இல்லங்களில் ஏழையெளியவர்களுக்கு உணவு வழங்கியும் அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் வழங்கியும் “இளைஞர் எழுச்சி நாளாக” சிறப்பாக கொண்டாடிட வேண்டுமென தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகளையும் அனைத்து மாவட்டத்திலுள்ள தொழிலாளர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்களையும் தொழிலாளத் தோழர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை18.
நாள்: 24.11.2025.

**பிடிசி ஜி.செல்வராஜ்,**
செயலாளர்,
தி.மு.க. தொழிலாளர் அணி

---

### இளைஞர் எழுச்சி நாள்: கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும்,

# மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழகங்கள் தோறும் நலத்திட்ட உதவிகள், உணவு வழங்கல்!

### மாவட்ட செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



வருகின்ற (27.11.2025 வியாழக்கிழமை) அன்று இளைஞர் எழுச்சி நாள் முன்னிட்டு கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைக்கழகங்கள் தோறும் நலத்திட்ட உதவிகள், உணவு வழங்கல், மரக்கன்றுகள் நடுதல், பள்ளி மாணவர்களுக்கு பள்ளி உபகரணங்கள் வழங்குதல், இரத்த தானம், மருத்துவ முகாம் நடத்துதல், விளையாட்டு போட்டிகள் நடுத்தி மற்றும் பொதுமக்க்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும்.

அதுசமயம், இந்நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற,சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், முன்னாள் ஒன்றிய குழுத்தலைவர்கள், முன்னாள் மாவட்ட ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகர மேயர், நகர மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாநகர, நகர, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, வர்ததகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சுற்றுச்சூழல் அணி, அமைப்பு சாரா தொழிலாளர் அணி,, அயலக அணி, தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

---

# அறிவுத் திருவிழா ஒரு பதிப்பாளரின் பார்வையில்!

கடந்த ஒன்பது நாட்களாக சென்னையில் மௌனமாக ஓர் அறிவுப் புரட்சி நடந்தேறியது. திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி சார்பாக நடத்தப்பட்ட புத்தகக் காட்சி வரலாற்றுச் சிறப்புமிக்கது. இதனை வெறும் புத்தகக் காட்சி என்று சொல்லிவிட்டுக் கடந்து விட முடியாது. இது ஓர் அறிவுத் திருவிழா. திருப்புமுனை விழா.

கடந்த 50 ஆண்டுகளாக எத்தனை எத்தனையோ புத்தகக் காட்சிகள் கண்டிருக்கிறோம். ராஜாஜி அரங்கத்தில் 70களில் நடைபெற்ற குழந்தைகள் புத்தகக் காட்சி தொடங்கி இன்று வரை ஏராளமான புத்தகக் காட்சிகள். சென்னை மட்டுமல்ல மாநிலமெங்கும். பிறகு பிற மாநிலங்கள், அதனைத் தொடர்ந்து உலகத்தில் பல முக்கிய புத்தகக் காட்சிகள் எனப் பல கண்டிருக்கிறோம்.

இதில் குறிப்பிட்ட வகை சார்ந்த சிறப்புப் புத்தகக் காட்சிகளையும் கண்டிருக்கிறோம். குழந்தைகளுக்கானது, பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு, ஆன்மீகத்திற்கு எனப் பல்வேறு புத்தகக் காட்சிகள் நடந்தேறி இருந்தாலும் முதன்முறையாக அறிவுத் திருவிழா என முற்போக்கு புத்தகங்களை மட்டுமே காட்சிப்படுத்துவோம் என்ற நோக்கில் மிகச்சிறந்த ஒரு புத்தகக் காட்சியைத் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இளைஞரணி நடத்தி முடித்து இருக்கிறது. மக்களின் சிந்தனையைத் தூண்டும் வகையில் அறிவியல் மனப்பான்மையை வளர்க்கும் புத்தகங்கள், நெடிய பாரம்பரியம் கொண்ட திராவிட இயக்கத்தின் நூல்கள், பொதுவுடைமை அம்பேத்கரிய மற்றும் இடதுசாரி சிந்தனைகளை வளர்க்கும் நூல்கள் என ஏராளமாக அறிவுக்கதிர்கள் குவிந்த நூற் களஞ்சியமாய் அய்யன் வள்ளுவரின் கோட்டம் திகழ்ந்தது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அறிவுப் புரட்சிக்கு வித்திட்டவர் குடி கொண்டிருக்கும் இடத்தில் நடைபெற்றது சால பொருத்தம் தானே.

தேர்ந்தெடுத்த பதிப்பகங்கள், ஒவ்வொன்றிலும் வித்தியாசமான புத்தகங்கள், ஒரு கடையில் கண்ட புத்தகத்தை இன்னொரு இடத்தில் பார்க்க முடியாது. 50 கடைகள் என்றாலும் பல ஆயிரம் புத்தகங்கள். எல்லாமே அறிவு பொக்கிஷங்கள்.

குப்பையில்லை, கூளமில்லை. தூசுமில்லை தும்பும் இல்லை. மாசு படிந்த காற்றும் இல்லை. குளிர் ஊட்டப்பட்ட அரங்கில் சொகுசாக ஒவ்வொரு கடையிலும் நிதானமாக நின்று புத்தகங்களைப் புரட்டிப் பார்த்து, வேண்டியவற்றை வாங்கிச் செல்லக்கூடிய புதிய அனுபவம், வாய்ப்பு அனைவருக்கும் கிட்டியது. புத்தகக் காட்சியின் இறுதி நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துணை முதலமைச்சரோடு ஒவ்வொரு கடைக்கும் உள்ளே சென்று நிதானமாகப் புத்தகங்களைப் புரட்டி அவைகளைக் குறித்துக் கேட்டு அறிந்ததும் விரும்பியதைத் தன்னுடைய தொகுப்புக்கு வாங்கியதும் இதற்குச் சாட்சி.

முதலமைச்சர், துணை முதல் அமைச்சர் முன்னத்தி ஏர்களாய் வழிகாட்டியதால் அமைச்சர் பெருமக்கள் நாடாளுமன்றச் சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு பொறுப்பாளர்கள் எனத் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பெரும் திரளாகத் திரண்டு வந்து புத்தகக் காட்சியை நிரம்பி வழிய வைத்தனர். ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டார்கள். பங்கேற்ற பதிப்பாளர்களுக்கு மனதும் நிரம்பியது. பணப்பையும் நிரம்பியது.


குடும்பம் குடும்பமாகக் குழந்தைகளோடு புத்தகக் காட்சியில் மக்களைப் பார்த்தபோது வாசிப்புப் பழக்கம் அவ்வளவு எளிதாக நம்மை விட்டுப் போய்விடாது என்கிற நம்பிக்கை துளிர்விட்டது.

தங்கள் வீட்டு நிகழ்ச்சி போல அமைப்பாளர்கள் பெரும் அக்கறை கொண்டு எல்லோருடைய நலனையும் கேட்டறிந்து அதை நிவர்த்தி செய்த பாங்கு சிறப்பு. அரங்க உரிமையாளர்களுக்கு அவர்கள் இருக்கும் இடத்திலேயே தேடிச் சென்று சுவையான புலால் உணவு. அருந்துவதற்குக் காபி தேநீர் வழங்கப்பட்டது கூடுதல் சிறப்பு. இதனால் உண்ணச் செல்வதற்கான நேர விரயம் இல்லாமற் போனது. பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் சிறப்பு புலனக் குழுத் தொடங்கப்பட்டு அவ்வப்போது செய்திகள் பரிமாறப்பட்டு நிகழ்ச்சிகள் செவ்வனே நடைபெற அடிக்கோலினர் அமைப்பாளர்கள். இதன் காரணமாக ஒலிபெருக்கியில் தொடர்ந்து குரல்கள் எழுப்பி அரங்கத்தை ஒலி மாசு செய்யாமல் இருக்க ஏதுவாகியது. இதற்கு ஏராளமான தோழர்கள் அல்லும் பகலும் உழைத்தனர். அவர்களுக்கு மாநாடு பொதுக்கூட்டங்கள் நடத்திய அனுபவங்கள் இருந்தாலும் புத்தகக் காட்சி என்பது முதன்முறை. இதில் ஏற்படும் சங்கடங்கள் பிரச்சனைகள் புதிது. ஆனால் எல்லாவற்றையும் புன்சிரிப்போடு சீரமைத்தது கொண்டு சென்றது சிறப்பு.

புத்தகக் காட்சி என்றால் இது போன்று உலகத் தரத்தோடு பங்கேற்கும் பதிப்பாளர்கள், புத்தக வாசகர்கள் இவர்கள் நலன்களைக் கருத்தில் கொண்டு அமைய வேண்டும் என்கிற வகையில் புதிய தரத்தினை இந்த அறிவுத் திருவிழா நிர்மாணித்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.

திராவிடர் கழக பிரச்சாரச் செயலாளர் தோழர் அருள்மொழி குறிப்பிட்டது போல வள்ளுவர் கோட்டமும் ஒரு கோயில் தான். அங்கே தேரும் இருக்கிறது. கற்சிலையும் இருக்கிறது. கடவுள் சிலை அல்ல, அய்யன் வள்ளுவரின் சிலை உள்ளது. இங்கே நம்பிக்கை அல்ல அறிவு தான் மூலதனம். அறிவுப் புரட்சிக்கு வித்திட்ட இந்தக் கோயிலில் ஏராளமான நூல்கள் அறிவு படையல்களாகப் பரந்து விரிந்து காணப்பட்டன.

மாலை நேரக் கருத்தரங்குகள் செவிக்கு விருந்தாய் அறிவுக்குத் திறவுகோலாய் அமைந்தது. 44 உரைவீச்சுகள் நவம்பர் 08இல் தொடங்கி 16 வரை ஒன்பது நாட்களாக அரங்கேறின. எல்லாமே அறிவுச்சுரங்கத்திற்குப் பாலமாக அமைந்தன. கண்ணைக் கவரும் வண்ண விளக்குகளில் அலங்கரிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தில் நாள்தோறும் கோலாகலமாய் கலை நிகழ்ச்சிகள். இறுதி நாள் அன்று பங்கு கொண்ட பதிப்பாளர்கள் ஒவ்வொருவரையும் அழைத்து அவர்களுக்குக் கேடயம் அளித்து புன்முறுவலோடு விடை கொடுத்த துணை முதலமைச்சர் அவர்களுடைய செயல் ஒப்பற்ற பண்புநலன்.



முனைவர் கோ.ஒளிவண்ணன்
எமரால்டு பதிப்பகம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல இத்தகைய புத்தகக் காட்சிகள் சென்னையில் மட்டுமின்றி மாநிலத்தில் பல இடங்களில் நடத்தப்பட வேண்டும். வெறும் புத்தகக் காட்சி மட்டுமின்றி பதிப்பாளர்கள் எழுத்தாளர்கள் மொழிபெயர்ப்பாளர்கள் இவர்களுக்குக் காலத்திற்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்ளவும் உலக சூழ்நிலைக்குத் தங்களைத் தங்களது படைப்புகளைக் கொண்டு செல்வதற்கும் சென்னை பன்னாட்டுப் புத்தகக் காட்சி போன்றவற்றின் வாயிலாகப் பயன்பெறுவதற்கு வழி வகுக்கவும் தொடர் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட வேண்டும்.

திராவிடர் இயக்கம் என்பது அரசியல் கட்சி அல்ல. சமூக நீதி அறிவியல் மனப்பான்மை மானுடப் பற்று எனப் பல கோட்பாடுகளை உட்கொண்ட மக்கள் இயக்கமாகும். நூறு ஆண்டுகள் கடந்து இவ்வியக்கம் செழிப்போடும் பொலிவோடும் பீடுநடை போடுவதற்கு அடிப்படை காரணம் தலைமுறை தலைமுறையாக தொடர்ந்து அறிவை புகட்டி வருவதே ஆகும். மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டது போலத் தமிழரின் கலை இலக்கிய அரசியல் பண்பாட்டுத் துறைகளில், புதுமைகளைப் புகுத்திய பேரியக்கம் தி.மு.கழகம். அந்த சீரிய பணியினைத் தொடர்ந்து செய்து வருவது சமூகத்துக்கு ஆற்றும் பெரும் பணியாகும். இன்றைய தலைமுறை மட்டுமல்ல வருங்காலத் தலைமுறையினரும் இதன் பயனை அடைவது உறுதி.

பல்கிப் பெருகிவரும் டிஜிட்டல் உலகில் புத்தகங்கள் அடியோடு காணாமல் போய்விடுமோ என்று உலகமெங்கும் அச்சம் ஏற்பட்டு போர்க்கால அடிப்படையில் எப்படியாவது மீண்டும் மக்களைப் புத்தகங்கள் படிக்க வைக்க வேண்டும் என்று நாடுகள் பலவற்றில் உத்தி சார்ந்த திட்டங்களை வகுத்து வாசிப்பை நோக்கி நகரும் சமுதாயத்தை அமைக்கிறார்கள். இதனை நன்கு உணர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணி இன்று ஏற்றியுள்ள இந்த அறிவு தீ எப்படிப்பட்ட தலைமுறையை இந்த மாநிலத்தில் கட்டமைக்க விரும்புகிறார்கள் என்பதைப் புலப்படுத்தியது.

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு.**

அதற்கு வழி வகுக்கும் இத்தகைய அறிவுத் திருவிழாக்கள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். இதன் மூலம் அறிவார்ந்த சமூகத்தை உருவாக்கிட முடியும். ஒரு கொண்டாட்ட மனநிலையும் அளிக்க முடியும்.